**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**<u>OS.397/2015</u>**

<u>17.02.2026.</u>

## <u>DW - 1</u>

**<u>பி.வா.சா.1.பாலசுப்ரமணியன், த/பெ. நாராயணசாமி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:**

20.11.2011 ல் நடந்த கிராம பஞ்சாயத்தில் எனது 4 சகோதரிகளும் கையெழுத்து போடவில்லை என்றால் - சரிதான். நானும் எனது குடும்ப உறுப்பினர்களும் சேர்ந்து இதுநாள்வரை பதிவு செய்யப்பட்ட எந்த பாகப்பிரிவினை பத்திரமும் ஏற்படுத்திக்கொள்ளிவல்லை என்றால் - சரிதான். நான் எந்த வருடம் செட்டில்மெண்ட் செய்தேன் என்றால் - 06.08.2025 ல் எனது மனைவிக்கு செய்துக்கொடுத்தேன். வழக்கு நடக்கும்போதே எதன் அடிப்படையில் செட்டில்மெண்ட் செய்துக்கொடுத்தேன் என்றால் - எனது தனிப்பட்ட பெயரில் உள்ள சொத்தை செட்டில்மெண்ட் செய்துக்கொடுத்தேன். அதன் சர்வே எண். 335/83 ஆகும். அந்த சொத்து ஆ அட்டவணை சொத்தாக காணப்பட்டுள்ளது என்றால் - சரிதான். எனது அண்ணனுக்கு எந்தெந்த சர்வே எண்ணில் உள்ள சொத்துக்களை எவ்வளவு ஒதுக்கி கொடுத்தேன் என்றால் - சர்வே எண். 335/61, 335/79, 335/83 ல் உள்ள அனைத்து சொத்துக்களிலும் சரிப்பாதி இடத்தை ஒதுக்கி கொடுத்துள்ளேன். அதன்படி பாகப்பிரிவினை ஏற்படுவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் - சரிதான்.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).**

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி
மன்னார்குடி.